## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 113/2012

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணய்யா மந்தடி | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : கார்த்திகேயபுரம் மோட்டூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

02.04.2025

**<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

2. 23.07.2002ல் ராமசாமியிடம் இருந்து ஜெயபால் கிரையம் வாங்கிய ஆவணம் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 2002ல் கிரையம் வாங்கிய பிறகு அளவுகள் குறித்து 2009ல் எழுதப்பட்ட பிழைத்திருத்தல் ஆவணம் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 20.07.2009ம் தேதியிட்ட பிழைத்திருத்தல் ஆவணம் அசல் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பி.வா.சா.ஆ 2 பிழைத்திருத்தல் ஆவணத்தில் வாரிசுதாரர்களில் ஒருவரான கல்யாணசுந்தரம் கையெழுத்து செய்யாததால் அவரிடம் சம்மத பத்திரம் எழுதி வாங்கினார்கள் என்றால் அவர்கள் வாங்கியது எனக்கு தெரியாது. அவர்கள் 2, 3 பத்திரம் போட்டு கொண்டார்கள்.

3. எனது சொத்திற்கு கிழக்கே ஜெயபாலுக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் அந்த மனை அவருடையது இல்லை. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர், நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் வந்த அளந்தார்கள் என்றால் ஆமாம். அப்போது இருதரப்பு வழக்கறிஞர்களும் வழக்கு சொத்தில்

இருந்தார்கள் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அளந்து தாக்கல் செய்த அறிக்கையில் நீல வண்ணமிட்ட பகுதி ஜெயபால் உடையது என்றும் சிவப்பு வண்ணமிட்ட பகுதி என்னுடையது என்றும் காட்டி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பொய்யானது.

4. ஆணையர் அறிக்கை தவறானது என அதை ரத்து செய்யவோ மறு ஆணையர் நியமணம் செய்யவோ நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் எந்த பக்கம் சாலை உள்ளது என்றால் கிழக்கேயும், வடக்கேயும் சாலை உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது பிராதின் சொத்து விவரத்தில் அவ்வாறு கிழக்கேயும் வடக்கேயும் சாலை இருப்பதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கிழமேல் சாலையும் தென்வடல் சாலையும் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எந்த சாலையும் இல்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் என் சொத்திற்கு தெற்கே கிழக்கு மேற்காக சாலை உள்ளதாக காட்டியுள்ளார் என்றால் சரிதான்.

5. எனது பிராதின் சொத்து விவரத்தில் அவ்வாறு என் சொத்திற்கு தெற்கே கிழக்கு மேற்காக சாலை உள்ளதாக சொல்லவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. எனது வழக்கு சொத்தின் புல எண்.215/8, 215/9 என்றால் சரிதான். கிழமேல், தென்வடல் அளவுகளை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. பிரதிவாதி ஜெயபாலின் சொத்து புல எண்.218/5A மனை எண்.134 என்றால் எனக்கு தெரியாது. எனது சொத்தின் கிழக்கே ஜெயபால் சொத்து உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனக்குதான் மொத்தமாக உள்ளது. அவருக்கு அங்கு சொத்து இல்லை.

6. பிரதிவாதி சொத்திற்கு கிழக்கேதான் 20 அடி சாலையும் தெற்கே 30 அடி சாலையும் உள்ளது என்றால் இல்லை. என் சொத்திற்கு கிழக்கேயும் தெற்கேயும் சாலை உள்ளது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் நீல வண்ணமிட்ட பகுதி ஜெயபால் உடையது என்றும் சிவப்பு வண்ணமிட்ட

பகுதி என்னுடையது என்றும் காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. நீல வண்ணப்பகுதிக்கு கிழக்கேயும் தெற்கேயும் சாலை உள்ளதாக ஆணையர் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது என்றால் அது என்னுடைய விவசாய நிலம் ஆகும். அந்த நிலத்தில் என்ன பயிர் விவசாயம் செய்கிறேன் என்று எனது பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை.

7. நான் வழக்கு சொத்தில் என்ன விவசாயம் செய்தேன் என்பதை காட்ட அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)